# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 03/பேரூ/2025**
**நாள்: 16.05.2025**

திரு.மூ. ஈஸ்வரன் --- முறையீட்டு மனுதாரர்
சின்னமனூர்
தேனி மாவட்டம்

செயல் அலுவலர், --- எதிர்மனுதாரர்
பண்ணைப்புரம் பேரூராட்சி,
தேனி மாவட்டம்

தேனி மாவட்டம், சின்னமனூர், காந்தி நகர் காலனி, 4வது வார்டு, 4வது தெரு. கதவு எண் 2/4 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. மூ. ஈஸ்வரன் என்பவரின் 16.12.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.12.2024 அன்று பெறப்பட்டு 03/பேரூ/2025 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

தேனி மாவட்டம், சின்னமனூர், காந்தி நகர் காலனி, 4வது வார்டு, 4வது தெரு, கதவு எண். 2/4 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. மூ. ஈஸ்வரன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"நான் தேனி மாவட்டம், பண்ணைப்புரம் பேரூராட்சியில் நிரந்தர துப்புரவுப் பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் முதல் முதலில் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக தெரிவு செய்யப்பட்டு தொகுப்பூதிய அடிப்படையில் க. புதுப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சியில் 19.03.1998–ல் நிரந்தரம் செய்யப்பட்டு 26 ஆண்டுகளாக தொடர்ந்து ஒரே பணியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் பட்டியல் இனத்தில் இந்து குறவன் வகுப்பைச் சார்ந்தவன். நான் 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளேன். பண்ணைப்புரம் பேரூராட்சி அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வந்த திரு. M. பாலசுப்பிரமணி என்பவர் வயது முதிர்வின் காரணமாக 30.06.2024ஆம் தேதி அன்று ஓய்வு பெற்றுள்ளதை அடுத்து அந்த பணியிடம் காலியாக உள்ளது. நான் பண்ணைப்புரம் பேரூராட்சி அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கான முன்னுரிமைப் பட்டியலில்

முதலிடத்தில் இருக்கிறேன். இப்பதவிக்குரிய கல்வித் தகுதி பெற்றுள்ளேன். காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கான பணிமூப்பு பட்டியல் மற்றும் கல்வித் தகுதியின் அடிப்படையில் எனக்கு பதவி உயர்வு வழங்குமாறும், வேறு பேரூராட்சிகளில் இருந்து இந்த பணியிடத்திற்கு பணி மாறுதலில் நிரப்பக்கூடாது என்றும் கருணை அடிப்படையில் இந்த பணியிடத்திற்கு பணி நியமனம் செய்யக் கூடாது என்று 01.07.2024 நாளிட்ட விண்ணப்பத்தின் வாயிலாக வேண்டி இருந்தேன்.

05.08.2024 நாளிட்ட விண்ணப்பத்தின்படி, தேனி மாவட்ட பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. பாலசுப்பிரமணி மற்றும் இளநிலை உதவியாளர் ஓம். முருகனும் உரிய காலத்திற்குள் பணியமைப்பு விதிகளுக்கு உட்பட்டு காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணி இடத்திற்கு முன்னுரிமைப் பட்டியல் தயார் செய்து தகுதி வாய்ந்த எனக்கு அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்காமல் காலம் தாழ்த்தி வந்த காரணத்தினால், மேற்படி நபர்களுக்கு உரிய உத்தரவு வழங்கி விரைந்து அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்கிட தேனி மண்டல பேரூராட்சி உதவி இயக்குநர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்தேன்.

ஆனால், 02.12.2024 நாளிட்ட பண்ணைப்புரம் செயல் அலுவலர் கடிதத்தின்படி அரசாணை எண்.205 நாள் 23.03.1989–ல் பக்கம் எண்.328–ல் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| Name of the post | Method of Recruitment | Qualification |
|---|---|---|
| Class-I<br>Office Assistants | By direct recruitment or<br><br>By transfer from among menials paid from contingencies | I) A pass in VIII Standard<br>II) Must be able to ride bicycles; Provided that the qualifications prescribed in (I) above and age limit if any prescribed under the rules, shall not applied to persons appointed by transfer from one post to another or from menials paid from contintered services under the town panchayats before they had completed the age 28 years and served for a continuous period of not less than one year. |

எனவே மேற்கண்ட அரசாணையின்படி தங்களுக்கு பதவி உயர்வு மூலமாக அலுவலக உதவியாளர் பணியிடம் வழங்க வழிவகை இல்லை என்ற விபரம் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது என்று ஆறு மாதங்கள் கழித்து காலதாமதம் செய்து தெரிவித்துள்ளார்.

ஆனால் தேனி மாவட்டத்தில் உள்ள ஆண்டிப்பட்டி பேரூராட்சியில் துப்புரவு பணியாளர் பணியில் இருந்து அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து வரும் ம. பாலசுப்பிரமணி (தற்போது தேனி மண்டல பேரூராட்சியில் உதவி இயக்குநர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.)

துப்புரவு பணியாளர் பணியில் இருந்து அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு பெற்று தேவாரம் பேரூராட்சியில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வரும் A.மணிவாசகம்.

துப்புரவு பணியாளர் பணியில் இருந்து அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு பெற்று உத்தமபாளையம் பேரூராட்சியில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வரும் அ. பொம்மையன்.

ஹைவேவிஸ் பேரூராட்சியில் பணிபுரிந்து வரும் அ. முருகன், துப்புரவு பணியாளர் பணியிலிருந்து இரவுக் காவலராக பணி மாறுதல் செய்யப்பட்டு பின்பு இரவு காவலர் பணியிலிருந்து அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு பெற்றுள்ளார்.

பண்ணைப்புரம் பேரூராட்சியில் மேல்நிலை தொட்டி காவலராக பணிபுரிந்து வந்து அலுவலக உதவியாளர் பணியாளர் பணியிடத்திற்கு ம. பாலசுப்பிரமணி பதவி உயர்வு பெற்றுள்ளார்.

மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் ர. வாசிமலை முதன்முதலில் துப்புரவு பணியாளர் பணியிலிருந்து அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு பெற்று பின்பு, இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற்றுள்ள ஆகியோர்கள் அரசு நிலையாக்கப்படாத கீழ்நிலை பணிகளான துப்புரவு பணியாளர், மேல்நிலை தொட்டி காவலர் மற்றும் இரவு காவலர் பணி இடத்திலிருந்து அரசாணை 205–ன்படி அலுவலக உதவியாளர் பணி இடத்திற்கு பதவி உயர்வு பெற்றுள்ளார்கள்.

ஆனால், அதே அரசாணையை காட்டி பக்கம் 328 எண்ணில்

| Name of the post | Method of Recruitment | Qualification |
|---|---|---|
| Class-I<br>Office Assistants | By direct recruitment or<br><br>By transfer from among menials paid from contingencies | I) A pass in VIII Standard<br>II) Must be able to ride bicycles; Provided that the qualifications prescribed in (I) above and age limit if any prescribed under the rules, shall not applied to persons appointed by transfer from one post to another or from menials paid from contintered services under the town panchayats before they had completed the age 28 years and served for a continuous period of not less than one year. |

என்று, மேற்கண்டுள்ள விவரப்படி குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர துப்புரவு பணியாளர் பணியிலிருந்து அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்க வழிவகை இல்லை என்ற விபரம் தெரிவிக்கப்படவில்லை.

ஆகவே, தகுதி வாய்ந்த எனக்கு துப்புரவு பணியாளர் பணி இடத்தில் இருந்து அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு தேனி மாவட்டத்தில் உள்ள மேற்கண்ட அரசு நிலையாக்கப்படாத கீழ்நிலை பணியாளர்களான துப்புரவாளர், மேல்நிலை தொட்டி காவலர் இரவு காவலர் பணியிலிருந்து மேற்கண்ட பணியாளர்களுக்கு அலுவலக உதவியாளர் பணிக்கு பதவி உயர்வு வழங்கியது போல் எனக்கும் வழங்க வேண்டுமென்றும், எனக்கு பதவி உயர்வு வழங்கக் கூடாது என்ற உள்நோக்கத்தோடு செயல்பட்டு 02.12.2024 நாளிட்ட பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலரின் குறிப்பாணை ந.க. எண்.26/2024–ல் துப்புரவு பணியாளர் பணியிலிருந்து அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வில் செல்ல வழி வகை இல்லை என்று ஒரு

பொருத்தமில்லாத உத்தரவை தந்து எனக்கு உண்டான உரிமையை மறுத்து வந்த செயல் அலுவலர் திரு. பாலசுப்பிரமணி மற்றும் இளநிலை உதவியாளர் ஓம். முருகன் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை மேற்கொண்டு தகுதி வாய்ந்த எனக்கு துப்புரவு பணியாளர் பணியில் இருந்து அலுவலக உதவியாளர் காலி பணியிடத்திற்கு இனியும் காலம் தாழ்த்தாமல் பதவி உயர்வு கிடைக்க வழிவகை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 08.01.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 23.01.2025 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

> "தேனி மாவட்டம், க. புதுப்பட்டி பேரூராட்சியில் 19.03.2001 தேதி முதல் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்து வந்த திரு. மூ. ஈஸ்வரன் என்பவர் தனியரது குடும்ப சூழ்நிலை காரணமாக பணியிட மாறுதலில் பண்ணைப்புரம் பேரூராட்சியில் 23.08.2023 முதல் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்து வருகிறார்.
>
> இப்பேரூராட்சியில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்த பணியாளர் 30.06.2024–ல் வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். எனவே அலுவலக உதவியாளர் பணியிடமானது 01.07.2024 முதல் காலியிடமாக இருந்து வருகிறது.
>
> மேலும், இப்பேரூராட்சியில் 17.12.2001 முதல் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்து வரும் திரு. சு. பழனிச்சாமி (எ) தேனி வீரன் என்பவர் 01.07.2024 ஆம் நாளிட்ட தனியரது விண்ணப்பத்தில் அலுவலக உதவியாளராக பதவி உயர்வு வழங்கிட கோரிய நிலையில் விதிமுறைகளின்படி தனியருக்கு பதவி உயர்வு வழங்க இயலாத விவரம் 02.12.2024 நாளிட்ட பண்ணைப்புரம் பேரூராட்சி அலுவலக குறிப்பாணை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
>
> தவிரவும், இப்பேரூராட்சியில் 23.08.2023 முதல் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வரும் திரு. மூ. ஈஸ்வரன் என்பவர் 01.07.2024 ஆம் நாளிட்ட தனியரது விண்ணப்பத்தில் அலுவலக உதவியாளராக பதவி உயர்வு வழங்கிட கோரிய நிலையில் விதிமுறைகளின்படி தனியருக்கு பதவி உயர்வு வழங்க இயலாத விவரம் 02.12.2024 நாளிட்ட பண்ணைப்புரம் பேரூராட்சி அலுவலக குறிப்பாணை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
>
> நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள் 2023, நாள் 12.04.2023, அனைத்து பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு பொருந்தும் எனவும், அவை 13 ஏப்ரல் 2023 முதல் நடைமுறைக்கு வரும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள் 2023–இல் பகுதி–V, சிறப்பு விதிகள், தமிழ்நாடு டவுன் பஞ்சாயத்து சேவை விதி எண் 227–இல் டவுன் பஞ்சாயத்து பொது பிரிவு அட்டவணை–1 –இன்படி அலுவலக உதவியாளர் பணியிடத்தினை நேரடி ஆட்சேர்ப்பு மூலம் நியமனம் செய்யப்பட வேண்டும் எனவும் அப்பணியிடத்திற்கான கல்வி தகுதியாக VIII ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் எனவும், குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்காணும் விவரப்படியான விதி எண் 227இன்படி அலுவலக உதவியாளர் பணியிடத்தினை நேரடி ஆட்சேர்ப்பு மூலம் நியமனம் செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதால், இப்பேரூராட்சியில் தூய்மை பணியாளராக 23.08.2023 முதல் பணிபுரிந்து வரும் திரு. மூ. ஈஸ்வரன் என்பவருக்கு அலுவலக உதவியாளராக பதவி உயர்வு வழங்க இயலாத நிலையில் உள்ள விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது " என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரையும் மற்றும் எதிர்மனுதாரரான பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலரையும் 27.02.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 18.02.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. மூ. ஈஸ்வரன் என்பவர் 27.02.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

- தேனி மாவட்டம், பண்ணைப்புரம் பேரூராட்சியில் 19.03.1998 முதல் 26 ஆண்டுகளாக நிரந்தர துாய்மைப் பணியாளராக பணியாற்றி வருகிறேன்.
- 30.06.2024 அன்று பண்ணைப்புரம் பேரூராட்சியில் அலுவலக உதவியாளர் பணியில் தனியர் ஓய்வு பெற்றதின் காரணமாக காலியான அலுவலக உதவியாளர் பணியிடத்தில் பதவி உயர்வு வழங்குமாறு நான் கோரியதில், 02.12.2024 நாளிட்ட பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலரின் குறிப்பாணையில் ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணை (நிலை) எண். 205, நாள் 23.03.1989ன்படி அலுவலக உதவியாளர் பணி நியமனத்திற்கு "By Direct recruitment <u>or</u> By Transfer from among menials paid from contingencies" என வரையறுக்கப்பட்டுள்ளதால் பதவி உயர்வு மூலமாக அலுவலக உதவியாளர் பணியிடம் வழங்க வழிவகை இல்லை என தெரிவிக்கப்பட்டது.
- ஆனால் ஆண்டிப்பட்டி, தேவாரம், உத்தமபாளையம் மற்றும் ஹைவேவிஸ் பேரூராட்சிகளில் பணியாற்றிய தூய்மைப் பணியாளர்களுக்கும் மற்றும் பண்ணைப்புரம் பேரூராட்சியில் ஒரு மேல்தொட்டி காவலருக்கும், மேற்காணும் அரசாணையின்படி அலுவலக உதவியாளராக பதவி உயர்வு வழங்கி பணிபுரிந்து வருகின்றனர்.
- தகுதி வாய்ந்த தனக்கு பதவி உயர்வு வழங்காமல் தனது உரிமையை மறுத்து வந்துள்ள பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் இளநிலை உதவியாளர் மீது உரிய நடவடிக்கை எடுத்து எனக்கு தற்போதுள்ள காலி பணியிடத்தில் அலுவலக உதவியாளர் பதவி உயர்வு வழங்கிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன் " என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. கா. பாலசுப்பிரமணியன் என்பவர் 27.02.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

- தேனி மாவட்டம், க. புதுப்பட்டி பேரூராட்சியில் 19.03.2001 முதல் துாய்மைப் பணியாளராக பணிபுரிந்து வந்த மனுதாரர் திரு. மூ. ஈஸ்வரன் என்பவர் பணியிட மாறுதலில் பண்ணைப்புரம் பேரூராட்சியில் 23.08.2023 முதல் துாய்மைப் பணியாளராக பணிபுரிந்து வருகிறார்.

- பண்ணைப்புரம் பேரூராட்சியில் அலுவலக உதவியாளர் பணியிடம் தனியர் ஓய்வு பெற்றதன் காரணமாக 01.07.2024 முதல் காலியிடம் ஏற்பட்டதைத் தொடர்ந்து அப்பணியிடத்தில் தனக்கு அலுவலக உதவியாளராக பதவி உயர்வு வழங்கிட மனுதாரரான பேரூராட்சி தூய்மைப் பணியாளர் திரு. மூ. ஈஸ்வரன் கோரியிருந்தார்.

- ஆனால் அரசாணை (நிலை) எண். 205, ஊரக வளர்ச்சித் துறை நாள் 23.03.1989ல் வெளியிடப்பட்ட ஆணையின்படி, அலுவலக உதவியாளர் பணியிடத்தை "By Direct recruitment or By Transfer from among menials paid from contingencies" மட்டுமே நிரப்பிட முடியும் என்பதால், தூய்மைப் பணியாளர் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம் அலுவலக உதவியாளர் பணியினை வழங்கிட வழிவகை இல்லை என 02.12.2024 நாளிட்ட பேரூராட்சி குறிப்பாணை முலம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது.

- மேலும் 2023ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி விதிகளில் விதி 227ன்படி அலுவலக உதவியாளர் பணியிடத்தினை நேரடி ஆட்சேர்ப்பு மூலம் (By Direct Recruitment) மட்டுமே நியமனம் செய்யப்பட வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

- மேற்காணும் விதி 227ன்படியும் மனுதாரருக்கு அலுவலக உதவியாளர் பதவி உயர்வு வழங்கிட வழிவகையில்லை. இதேபோன்று அலுவலக உதவியாளர் பதவி உயர்வு கோரிய பண்ணைப்புரம் பேரூராட்சியின் தூய்மைப் பணியாளர் திரு. சு. பழனிச்சாமி (எ) தேனி வீரன் என்பவரின் விண்ணப்பத்திற்கும் மேற்காணும் விதிகளின்படி வழிவகையில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

- மனுதாரர் புகாராக தெரிவிக்கும் பண்ணைப்புரம் பேரூராட்சியில் மேல் தொட்டி காவலர் மற்றும் இதர பேரூராட்சிகளில் தூய்மைப் பணியாளர் பதவியிலிருந்து அலுவலக உதவியாளராக பணி உயர்வு வழங்கிய விவரம் எனக்கு தெரியவில்லை என்பதை இம்முறைமன்ற நடுவத்திற்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

8. தேனி மாவட்டம், சின்னமனூர் என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. மூ. ஈஸ்வரன் என்பவர் தனது 16.12.2024 நாளிட்டமுறையீட்டு மனுவில் தேனி மாவட்டம், பண்ணைப்புரம் பேரூராட்சியில் அலுவலக உதவியாளர் பணியிடமானது தனியர் 30.06.2024 அன்று ஓய்வு பெற்றதன் காரணமாக 01.07.2024 முதல் காலியாகவுள்ள அப்பணியிடத்தில், நிரந்தர தூய்மைப் பணியாளராக பணியாற்றும் தன்னை பதவி உயர்வு மூலம் அலுவலக உதவியாளர் பணியிடத்தை நிரப்பிட பேரூராட்சியினரால் மறுப்பு தெரிவித்து உள்ளதாக புகாராக தெரிவித்து, அப்பணியிடத்தில் தன்னை பதவி உயர்வு மூலம் நிரப்பிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கோரியுள்ளார்.

மனுதாரர் திரு.மூ. ஈஸ்வரன் என்பவரின் கோரிக்கைக் குறித்து, அரசாணை (நிலை) எண்.205, ஊரக வளர்ச்சித் துறை நாள் 23.3.1989–ல் வெளியிடப்பட்ட ஆணையின்படி, அலுவலக உதவியாளர் பணியிடத்தை By Direct recruitment OR By transfer from among menials paid from contingencies மட்டுமே நிரப்ப முடியும் என்பதால், தூய்மைப் பணியாளர் பணி மூலம் பதவி உயர்வாக அலுவலக உதவியாளர் பணியினை வழங்கிட வழிவகையில்லை என்பதை

மனுதாரருக்கு ஏற்கனவே 02.12.2024 நாளிட்ட பண்ணைப்புரம் பேரூராட்சி குறிப்பாணை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதை, பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் ஆவணம் மூலம் தெரிய வருகிறது. மேலும், 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி விதிகள் விதி 227–ன்படி அலுவலக உதவியாளர் பணியிடத்தினை நேரடி ஆட்சேர்ப்பு (Direct Recruitment) மூலம் மட்டுமே நியமனம் செய்யப்பட வேண்டும் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்காணும் விதிகளின்படியும் பதவி உயர்வு வழங்கிட வழிவகையில்லை என்பதையும், பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் ஆவணம் வாயிலாக அறிய வருகிறது. தவிர, பிற பேரூராட்சிகளில் தூய்மைப் பணியாளர் பணியிடத்திலிருந்து அலுவலக உதவியாளர் பணியிடத்தில் எதன் அடிப்படையில் பதவி உயர்வு வழங்கியுள்ளனர் என்கிற விவரம் பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு தெரியவில்லை என்பதை அவரது வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

இந்நேர்வில், அலுவலக உதவியாளர் பணி நியமனம் குறித்து அரசால் வெளியிடப்பட்டுள்ள அரசாணையின்படியும் மற்றும் அரசு நிர்ணயம் செய்துள்ள விதிகளின்படியும் பேரூராட்சி செயல் அலுவலர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், பண்ணைப்புரம் செயல் அலுவலரின் அறிக்கையை ஏற்று, இப்புகார் மனு தொடர்பான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறை மன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும், மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் புகாராக தெரிவிக்கும்

(i) ஆண்டிப்பட்டி பேரூராட்சியில் துப்புரவு பணியாளரான திரு. பாலசுப்பிரமணி,
(ii) தேவாரம் பேரூராட்சியில் துப்புரவு பணியாளரான திரு. A. மணிவாசகம்,
(iii) உத்தமபாளையம் பேரூராட்சியில் துப்புரவு பணியாளரான திரு. அ. பொம்மையன்,
(iv) மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியில் துப்புரவு பணியாளரான திரு. ர. வாசிமலை,
(v) ஹைவேலிஸ் பேரூராட்சியில் துப்புரவு பணியாளரான திரு. அ. முருகன் மற்றும்
(vi) பண்ணைப்புரம் பேரூராட்சியில் மேல்நிலைதொட்டி காவலரான திரு. ம. பாலசுப்பிரமணி

ஆகியோர் மேற்கண்ட அரசாணை நிலை எண். 205 ஊரக வளர்ச்சித் துறை, நாள் 23.03.1989ல் வெளியிடப்பட்ட அரசாணையின்படி அலுவலக உதவியாளராக பதவி உயர்வு பெற்றிருப்பதாக தெரிவித்துள்ள நிலையில், மேற்காணும் பதவி உயர்வு நியாயமான உரிய அரசாணையின்படி செயல்படுத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்திடுமாறு பேரூராட்சிகளின் இயக்குநரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு மே 16 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. மூ. ஈஸ்வரன்,
கதவு எண் 2/4, 4வது தெரு,
காந்தி நகர் காலனி,
4வது வார்டு, சின்னமனூர்–625 515,
தேனி மாவட்டம்.

(2) செயல் அலுவலர்,
பண்ணைப்புரம் பேரூராட்சி,
தேனி மாவட்டம்

(3) பேரூராட்சிகளின் ஆணையர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

(4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

20/5/25

செயலாளர்

20/5/25